தண்டையார்பேட்டை-புதுவண்ணாரப்பேட்டை இடையே

# டிராலியில் சென்று பாதுகாப்பு கமிஷனர் ஆய்வு

## மெட்ரோ ரெயில் நிறுவன அதிகாரிகள் தகவல்

சென்னை, பிப்.5-

தண்டையார்பேட்டை-புதுவண்ணாரப்பேட்டை இடையே டிராலியில் சென்று புதிய மெட்ரோ ரெயில் பாதையை பாதுகாப்பு கமிஷனர் ஆய்வு செய்கிறார்.

### மெட்ரோ ரெயில் விரிவாக்கம்

சென்னையில் முதலாவது மெட்ரோ ரெயில் வழித்தடத்தில் வண்ணாரப்பேட்டையில் இருந்து திருவொற்றியூர் விம்கோ நகர் வரை 9.051கிலோ மீட்டர் தூரத்திற்கு ரூ.3 ஆயிரத்து 770 கோடி மதிப்பில் விரிவாக்கப்பணிகள் நடந்தது.

இங்கு சுரங்கப்பாதையில் தியாகராஜர் கல்லூரி, தண்டையார்பேட்டை ஆகிய 2 ரெயில் நிலையங்களும், உயர்த்தப்பட்ட பாதையில் புதுவண்ணாரப்பேட்டை, சுங்கச்சாவடி, காலடிப்பேட்டை, திருவொற்றியூர் தேரடி, திருவொற்றியூர், விம்கோநகர் ஆகிய 6 மெட்ரோ ரெயில் நிலையங்களும் அமைக்க திட்டமிடப்பட்டது.

### பாதுகாப்பு கமிஷனர் ஆய்வு

இதில் தற்போது திருவொற்றியூர் தேரடி ரெயில் நிலையம் தவிர்த்துமீதம்உள்ள அனைத்து ரெயில் நிலையங்கள் மற்றும் ரெயில் பாதைகள் அமைக்கும் பணிகள் நிறைவடைந்து உள்ளன. தொடர்ந்து இந்தபாதையில் கடந்த மாதம் இறுதியில் பாதுகாப்பு கமிஷனர் வந்து ஆய்வு செய்வதாக இருந்தது. ஆனால்சிக்னல்செயல்படுவது குறித்த சான்றிதழ் மெட்ரோ ரெயில் நிறுவனத்துக்கு கிடைப்பதில் காலதாமதம் ஏற்பட்டது.

இதனால் அன்றைய தினம் ஆய்வு ஒத்திவைக்கப்பட்டது. தற்போது சான்றிதழ் கிடைக்கப்பெற்ற நிலையில் இன்று (வெள்ளிக்கிழமை) காலை பாதுகாப்பு கமிஷனர் தன்னுடையகுழுவுடன் சென்னைக்கு வருகிறார். காலையில் மெட்ரோரெயில்நிலையத்தில் மரக்கன்றுகளை நட்டு ஆய்வு பணியை தொடங்குகிறார்.

### டிராலியில்...

வண்ணாரப்பேட்டை சுரங்க மெட்ரோ ரெயில் நிலையத்தில் இருந்து டிராலியில் செல்லும் பாதுகாப்பு கமிஷனர், தியாகராயர் கல்லூரி, தண்டையார்பேட்டை மற்றும் உயர்த்தப்பட்ட பாதையில் உள்ள புதுவண்ணாரப்பேட்டைவரை உள்ள அனைத்து ரெயில் நிலையங்கள் மற்றும் ரெயில் பாதைகளை ஆய்வு செய்கிறார். குறிப்பாக ரெயில் நிலையங்களில் பயணிகளுக்கு செய்துதரப்பட்டுள்ள பாதுகாப்பு வசதிகள், தீ தடுப்பு உபகரணங்கள், டிக்கெட் கவுண்டர்கள்,பாதுகாப்பு அறைகள் போன்றவற்றை ஆய்வு செய்கிறார். அதேபோல் சுரங்கத்தில் செய்யப்பட்டுள்ள சிக்னல், பாதுகாப்பு வசதிகள் குறித்தும் ஆய்வு செய்கிறார்.

பின்னர் நாளை (சனிக்கிழமை) விம்கோநகரில்இருந்து புதுவண்ணாரப்பேட்டை வரை உள்ள தாங்கல், காலடிபேட்டை, திருவொற்றியூர், விம்கோ நகர் ரெயில் பாதைகள் மற்றும் ரெயில் நிலையங்களுக்கு டிராலியில் சென்று பாதுகாப்பு கமிஷனர் ஆய்வு செய்கிறார். பணி முடியாததால் திருவொற்றியூர் தேரடி ரெயில்நிலையம் ஆய்வுசெய்யப்படவில்லை.

தொடர்ந்து நாளை மறுநாள் மெட்ரோ ரெயிலில் சென்று ஆய்வு பணியில் ஈடுபடுகிறார். மொத்தம் 3 நாட்கள் இந்த ஆய்வு நடக்கிறது.

### சான்றிதழ்

ஆய்வுக்கு பின்னர் பயணிகள் ரெயிலை இந்தபாதையில் இயக்குவதற்கு சான்றிதழ் வழங்க இருக்கிறார். அதற்கு பிறகு இந்தபாதை ரெயில் போக்குவரத்துக்கு தயாராகிவிடும்.

வருகிற 14-ந்தேதி பிரதமர் நரேந்திரமோடி சென்னை வந்து இந்த பாதையை நாட்டுக்கு அர்ப்பணிக்க இருப்பதாகவும் சென்னை மெட்ரோ ரெயில் நிறுவன அதிகாரிகள் தரப்பில் கூறப்படுகிறது.